

# தி.மு.க. இளைஞர் அணி

# இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 06.03.2025 | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி | வகையாடி முனை, திருநெல்வேலி நகரம் | ராஜகம்பீரன் அப்பாஸ், சே.ரகுமாள் |
| 2 | 06.03.2025 | திருவண்ணாமலை தெற்கு | கலசப்பாக்கம் | அண்ணா திடல், கலசப்பாக்கம் நகரம் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, இரா.தமிழ்வாணன் |
| 3 | 06.03.2025 | திருவண்ணாமலை தெற்கு | திருவண்ணாமலை | திருவள்ளுவர் சிலை அருகே | மருத்துவர்.எஸ்.ஏ.எஸ்.ஹஃபீசுல்லா, மா.மதன்குமார் |
| 4 | 07.03.2025 | திருநெல்வேலி கிழக்கு | அம்பாசமுத்திரம் | தேரடித் திடல் அருகில், கல்லிடைக்குறிச்சி | இந்திரகுமார் தேரடி, செல்வ ஜெயந்தி |
| 5 | 07.03.2025 | திருவண்ணாமலை தெற்கு | கீழ்பென்னாத்தூர் | பேருந்து நிலையம் அருகே | தமிழ் காமராசன், ச.பேரரசன் |
| 6 | 07.03.2025 | திருவண்ணாமலை தெற்கு | செங்கம் | ராஜவீதி, செங்கம் | சௌமியன் வைத்தியநாதன், வி.பாலமுருகன் |
| 7 | 07.03.2025 | விருதுநகர் வடக்கு | விருதுநகர் | சங்கரலிங்கபுரம் | மதுரை பாலா, க.திருச்செல்வன் |
| 8 | 08.03.2025 | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | பனையூர் பேருந்து நிலையம் | இந்திரகுமார் தேரடி, தெ.வர்ஷினி |
| 9 | 08.03.2025 | திருநெல்வேலி கிழக்கு | இராதாபுரம் | செட்டிகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் | மதுரை பாலா, சகாய பெபிளா |
| 10 | 08.03.2025 | சேலம் மத்திய | சேலம் வடக்கு | கோரிமேடு, அஸ்தம்பட்டி | வழக்கறிஞர் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., செ.யோக ஸ்ரீ |
| 11 | 08.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி | ரிசர்வ் லைன், ஆனையூர் பஞ்சாயத்து, சிவகாசி | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்,** பா.முனீஸ்வரி |
| 12 | 09.03.2025 | தூத்துக்குடி வடக்கு | தூத்துக்குடி | சிதம்பரம் நகர் பேருந்து நிலையம், பாளை சாலை | **பொன்.முத்துராமலிங்கம்,** சஞ்சய் |
| 13 | 09.03.2025 | சேலம் மத்திய | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி ரவுண்டானா | வழக்கறிஞர் சரவணன் அண்ணாதுரை, சூரியபிரகாஷ் |
| 14 | 09.03.2025 | விழுப்புரம் தெற்கு | திருக்கோவிலூர் | திருவெண்ணைநல்லூர் | மாண்புமிகு **கோவி.செழியன்,** ச.கீர்த்தனா |
| 15 | 10.03.2025 | சேலம் மத்திய | சேலம் மேற்கு | கோட்டக் கவுண்டம்பட்டி, ஓமலூர் | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ், வெ.சரண்யா |
| 16 | 10.03.2025 | விழுப்புரம் மத்திய | விழுப்புரம் | கோலியனூர் | டான் அசோக், த.இன்பக்குமாரன் |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 04–03–2025.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2025) சென்னை னை காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி அருகில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய ஹாக்கி மைதானம், 2 பாக்ஸ் கிரிக்கெட் மைதானம் அடங்கிய சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்கான முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் தயாநிதி மாறன் எம்.பி. , பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர்ஜெ.மேகநாத ரெட்டி, மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (04.03.2025) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலைய முதல் தளத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம் மற்றும் பொது நூலகத்துறை சார்பில் ரூபாய் 1.62 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மெகா புத்தக பூங்கா (Mega Book Park) அமைக்கும் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு, பணியினை விரைவாக செய்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக இணை இயக்குநர் சங்கர சரவணன் மற்றும் மெட்ரோ நிர்வாக அலுவலர்கள் உடனிருந்தனர்.